**காத்தான்குடி நகர சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**
---------------------------------------------------

## 1 நிதிக்கூற்றுகள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 03 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 30 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து காத்தான்குடி நகர சபையின 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 255Mk அத்தியாயம் 177(2) ஆம் பிரிவின் பிரகாரம் நகர சபையின் 2015 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் சுருக்கம் அடுத்துவரும் மார்ச் மாதம் முதலாம் திகதிக்கு முன் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின்படி 2016 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 8,092,846 ஆக இருந்ததுடன் ஒப்பிடுகையில் அதற்கு நேர் முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 17,128,498 ஆக இருந்தது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 வீதவரிகள்

2016 திசம்பர் 31ல் நிலுவையாகக்காணப்பட்ட ரூபா 6,358,166 தொகையான வீத வரிகள் 2016 ஜூன் 30 வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவம்

பிலிசறு திட்ட நிதி மூலம் திண்மக் கழிவு மீள் சுழற்சி நடவடிக்கைகளுக்காக 2015 ஆம் ஆண்டு ரூபா 8,394,228 செலவில் ஒரு கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் சபையினால் சேகரிக்கப்படும் திண்மக் கழிவுகள் சபையின் எல்லைக்குள் அமைந்துள்ள

ஆற்றங்கரையில் கொட்டப்பட்டு வருகின்றன. இதனால் சுற்றாடலுக்கு அதிகளவில் பாதிப்பு ஏற்படுகின்றன எனினும் சபையினால் இது தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4 கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்

சபை தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்ட ஒழுங்கீனங்கள் மற்றும் குறைபாடுகள் சம்பந்தமாக சபையினால் இதுவரை சீர் செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகளுக்கான தொடர்பு கீழே தரப்பட்டுள்ளன

| அறிக்கைக்கான தொடர்பு | | உள்ளடக்கப்பட்ட விடயம் |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | |
| 2015 | 2.2.3 | நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு செலுத்த வேண்டிய ரூபா 6,642,880 தொகையை செலுத்த நடவடிக்கை எடுக்காமை. |
| 2015 | 4.1 (இ) | இலங்கை மின்சார சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 2,399,352 முற்பணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| 2015 | 4.1 (ஆ) | ஓய்வுபெற்ற இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 35,376 கடன் நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்காமை. |

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழ்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
|---|---|
| (அ) திண்மக் கழிவு முகாமைத்துவம் | திண்மக் கழிவுகளை மீள் சுழற்சி செய்ய நடவடிக்கை எடுத்தல். |
| (ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | i. நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படுதல்.<br>ii. பயன்படுத்தப்படாது விளைவற்று காணப்படும் சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல். |
| (இ) வருமான முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிடல். |